பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 03 | திங்கட்கிழமை | 17.03.2025 | அதிர்வு 224 |
|---|---|---|---|---|---|

## ஜே.வி.பி. செய்த கொலைகளை மறைக்க இடமளிக்கவே கூடாது!

### சஜித் அணி வலியுறுத்து

"பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை முன்னிலைப்படுத்தி கடந்த காலங்களில் ஜே.வி.பி. செய்த கொலைகளை மறைப்பதற்கு இடமளிக்கக் கூடாது. பட்டலந்தையில் குற்றமிழைத்

06

## பொலிஸ், பாதுகாப்பு சேவைகள் அரசியல் மயம் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் படு தீவிரம்



### சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சி என்று சம்பிக்க குற்றச்சாட்டு

"பொலிஸ் சேவை மற்றும் பாதுகாப்பு சேவை அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதால் நாட்டில் சட்டம் என்பதொன்று கிடையாது எனப் பாதாளக் குழுக்கள் கருதுகின்றன. அரசால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் மிகவும் தீவிரமடைந்துள்ளன."

– இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

06

# சகல சபைகளையும் தமிழரசு கைப்பற்றும்

## சுமந்திரன் முல்லைத்தீவில் நம்பிக்கை தெரிவிப்பு



(விஜயரத்தினம் சரவணன்)

**இலங்கைத் தமிழரசுக் கட்சி போட்டியிடுகின்ற சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மீண்டும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

05

## பொகவந்தலாவையில் கணவனும் மனைவியும் சடலங்களாக மீட்பு!





(பொகவந்தலாவை நிருபர் சதீஸ்)

பொகவந்தலாவை, தெரேசியா தோட்ட பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து கணவனும், மனைவியும்

06




இன்று என் பத்தியில் வருவது என் சொந்தச் சரக்கு அல்ல. முகப் புத்தகத்தில் சுட்டது.

வாசிப்பதற்கு விடயம் பொதிந்ததாகத் தெரிந்தது, அதனால் வாசகர்களுடன் அதனைப் பகிரலாம் என்று கருதினேன். அது இதுதான்:–

தாங்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் –

+ மத்திய வங்கி கொள்ளை புகழ் அர்ஜுன் மகேந்திரனை 24 மணி நேரத்தில் நாட்டுக்கு கொண்டு வருவோம் என்று சொன்னார்கள்.

+ உகண்டாவிற்குக் கொண்டு சென்ற காசைத் திரும்ப எம் நாட்டுக்கு கொண்டு வருவோம் என்று சொன்னார்கள்.

+ ராஜபக்ஷவை வீட்டை விட்டுக் கலைப்போம் என்றார்கள்.

+ எரிபொருள் விலையைக் குறைப்போம் என்றார்கள்.

+ ஊழல்வாதிகளை ஒழிப்போம் என்றார்கள்.

+ தாஜுதீன் கொலைக் குற்றவாளியை கைது செய்வோம் என்றார்கள்.

+ ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்

06



# தேசபந்து தவிர்ந்த ஏனைய சந்தேகநபர்கள் ஆறு பேரையும் கைது செய்ய வேண்டாம்

## சட்டமா அதிபர் அறிவிப்பு



வெலிகம பெலேன பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றிற்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தவிர்ந்த ஏனைய 6 சந்தேகநபர்களையும் கைது செய்ய வேண்டாம் என சட்டமா அதிபர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய முதற்கட்ட விசாரணைகள் நிறைவடையும் வரை சந்தேகநபர்களை கைது செய்ய வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறும் சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தவிர்ந்த ஏனைய 6 சந்தேகநபர்களின் நீதிப்பேராணை மனு இந்த மாதம் 21 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகக் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு வெலிகம - பெலென பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 8 பேரை கைது செய்வதற்கு அண்மையில் மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது

இந்நிலையில், மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் தமக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணைக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்குமாறு கோரி, பிரதிவாதியான தேசபந்து தென்னகோன் தமது சட்டத்தரணி ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி மனு மீதான முடிவு நேற்று வெளியிடப்படும் என முன்னதாக மாத்தளை நீதவான் நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இதனிடையே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் மனைவியிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வாக்குமூலம் ஹோகந்தரவில் உள்ள அவரது வீட்டில் வைத்துப் பெறப்பட்டதாகவும், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் இதுவரை எவ்விதமான தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்காகக் குற்றப்புலனாய்வு பிரிவினர் தற்போது பல இடங்களில் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அரச தாதியர் சங்கம் பணிப்பகிஷ்கரிப்பு



அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தினருக்கு முறையான பாதுகாப்பும் வசதிகளும் வழங்குதல் தொடர்பில் விசாரணை அறிக்கை வழங்குமாறு அறிவித்து சுகாதார அமைச்சின் செயலாளர் மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்நிலையில்இன்று காலை 10 மணி முதல் பகல் 1 மணி வரை மூன்று மணித்தியால பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு அரச தாதியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பதவியுயர்வு வழங்கப்படாமை மற்றும் சம்பள குறைப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து இந்த பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தினருக்கு உரியப் பாதுகாப்பு மற்றும் வசதிகளை வழங்குதல் தொடர்பில் விசாரணை அறிக்கை ஒன்றை வழங்குவதற்காகச் சுகாதார அமைச்சின் செயலாளர் வடமேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் எம். கே. சம்பத் இந்திக குமார உள்ளிட்ட மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

அந்த அறிக்கை இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளருக்கு வழங்குமாறு அமைச்சரவை அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத்துடன் அரச தாதியர் சங்கம் நாளை காலை 10 மணி முதல் பகல் 1 மணி வரை 3 மணி நேரத்திற்கு தமது சேவையிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளதாக அரச தாதியர் சங்கத்தின் அழைப்பாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

நோயாளர்களைப் பணயம் வைத்து, நோயாளிகளை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் வகையில், சுகாதார சேவையை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் யாரேனும் செயற்பட்டால் மக்களின் பக்கம் இருந்து அதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும், இந்த நோக்கத்திற்காகத் தயங்காமல் நடவடிக்கை எடுப்பதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார தொழிற்சங்கத்தினருடன் கலந்துரையாடித் தீர்வை பெற்றுக் கொள்ள முடியாத சிக்கல்கள், பிரச்சினைகள் ஏதும் இல்லை எனவும் அதற்காக அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அர்ப்பணிப்பதற்குத் தயாராகவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# பெப்ரவரியில் வருவாய் அதிகரிப்பை பதிவு செய்துள்ள சுற்றுலா வர்த்தகம்

இலங்கையின் சுற்றுலா ஊக்குவிப்பு வருமானம் பெப்ரவரி மாதம் 37.6 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 6.3 சதவீத அதிகரிப்பாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலா வர்த்தகம் ஊடாக நாட்டிற்கு 768.2 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளது.

கடந்த வருடம் முதல் இரண்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இது 11.7 சதவீத அதிகரிப்பாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# சாதாரண தர பரீட்சை இன்று ஆரம்பம் அசௌகரியங்களை அறிவிக்க துரித இலக்கம்




கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகும் சாதாரண தர பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதா தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரீட்சைகள் தொடர்பில் ஏதேனும் அசௌகரியங்கள் காணப்பட்டால் பரீட்சார்த்திகள் 1119 என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் துரித இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறியப்படுத்துமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, பரீட்சார்த்திகள் பரீட்சைகள் மத்திய நிலையத்துக்கு உரிய நேரத்துக்கு வருகைத்தருமாறும் பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதா தெரிவித்துள்ளார்.



# குறிஞ்சா தீவில் உப்பள உற்பத்தியை முன்னெடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி கலந்தாய்வு

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள குறிஞ்சா தீவில் உப்பள உற்பத்தியை முன்னெடுப்பது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறிஞ்சா தீவில் இலங்கை உப்புக் கூட்டுத்தாபனமே உப்பளத்தை நடத்தவுள்ளதாக உப்புக் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் இதன்போது தெரிவித்தார். அந்தக் காணியை அளவீடு செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அதனை உப்புக் கூட்டுத்தாபனத்திடம் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளுநர், வடக்கு மாகாண காணி ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.



# பட்டலந்தை அறிக்கையின் குற்றவாளிகளுக்குத் தண்டனை நிச்சயம் வழங்கப்படும்: நளிந்த உறுதி

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்டலந்தை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் உரையாற்றுவதற்கு மிகவும் தாமதமாகிவிட்டதாகவும், என்ன நடந்தாலும் இந்த அறிக்கை தொடர்பில் சட்ட நடவடிக்கை நிச்சயம் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியும் மே மாதமும் இந்த அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அறிக்கையைச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பவுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விவாதத்தை நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குழுவினர் கருத்து தெரிவித்தனர்.

எனினும் யார் என்ன சொன்னாலும் நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை தொடர்பில் இடம்பெறவுள்ள விவாதத்தில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் நீதிக்காக விவாதத்தை



நடத்துவதாகவும், அறிக்கையின் உண்மைத் தன்மைகள் தொடர்பில் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

பட்டலந்தை சம்பவம் தொடர்பில் முழுவதும் அறிந்தவர் முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க என்றும், அல் ஜசீராவின் சமீபத்திய நேர்காணலில் கேள்வியெழுப்பும் வரை அவர் அதைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# சகல சபைகளையும் தமிழரசு கைப்பற்றும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முல்லைத் தீவு கள்ளப்பாடு பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளராக புதிதாக பொறுப்பேற்றுள்ள எம்.ஏ.சுமந்திரனுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் பொன்னாடைபோர்த்தி மதிப்பளித்தார்.

இக்கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் சுமந்திரன் மேலும் கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி போட்டியிடுகின்ற உள்ளூராட்சித் தேர்தல் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சில இடங்களில் வேட்பாளர் நியமனங்களில் இருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, பெரும்பாலும் வேட்பாளர் நியமனங்கள் தொடர்பான முடிவுகள் எய்தப்பட்டிருக்கின்றன.

எனவே மிகவிரைவாக அடுத்தவாரம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வாம்.

அந்த வகையில் போட்டியிடுகின்ற அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கையிருக்கின்றது. - என்றார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூத்திரதாரியைக் கைது செய்வோம் என்றார்கள்.

+ பார் பெர்மிட் எடுத்தவர்கள் பெயர் விவரம் வெளியிடுவோம் என்றார்கள்.

+அரிசிக்குக் கட்டுப்பட்டு விலை என்றார்கள்.

+VITZ கார் ரூ.12 இலட்சத்தில் கொண்டு வந்து தருவோம் என்றார்கள்.

+தங்களிடம் 500 பைல்கள் (கோவைகள்) இருக்கின்றன என்றார்கள்.

ஆனால் இப்போது –

+செவ்வந்தியையும் காணோம், தேசபந்துவையும் கணோம்.

+இப்போது உள்ளூராட்சித் தேர்தலுக்கான புதிய வெளியீடு பட்டலந்த அறிக்கை

'இப்ப தானே வந்திருக்கிறோம். உடன பிள்ளை பெற முடியுமா?' என்று கேட்டார்கள். பிள்ளை பெறக் கூட 9 மாதங்கள் தேவைதானே...! இன்னும் பொறுத்திரு என்கிறார்கள். அதுக்குள்ளே எல்லா சபைகளையும் கைப்பற்றுவோம் என்று உளறுகிறார்கள். கேட்கிறவன் கேனையனா இருந்தா .......?

– என்று முடிகின்றது அந்த முகப்புத் தக விமர்சனப் பதிவு...!

அநுர குமார திஸநாயக்கா ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று அடுத்து வரும் சில தினங்களில் ஆறு மாதங்கள் பூர்த்தியாகப் போகின்றன.

அவரின் தனித்துவச் சாதனை என்று பேசுவதற்கு இந்த ஆட்சியில் ஏதுமில்லை என்பதுதான் கள யதார்த்தமாகும்.

## பொகவந்தலாவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து, சடலங்கள் இருப்பதைப் பொதுமக்கள் அவதானித்தனர். பின்னர் பொகவந்தலாவைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொகவந்தலாவைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சடலங்களுக்கு அருகாமையில் நஞ்சுப் போத்தல் ஒன்று இருந்தது எனக் கூறப்படுகின்றது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் சிறிது காலம் கொழும்பு பகுதியில் கூலி தொழில் செய்து வந்தார் என்றும், அவர் கொழும்பில் இருந்து தனது வீட்டுக்கு வருகை தந்து நான்கு நாட்கள் கடந்துள்ளன என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த இரண்டு சடலங்கள் தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

38 வயது கணவனும், 37 வயதான மனைவியுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரின் சடலங்களும் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவனின் பணப்பையை திருடிய நபர் சடலமாக மீட்பு!

## பொதுமக்களின் தாக்குதலில் கொல்லப்பட்டாரா?



பாடசாலை மாணவன் ஒருவரின் பணப்பையைத் திருடிய நபர் பொதுமக்களால் கற்களால் தாக்கப்பட்டு தப்பியோடியதையடுத்துப் பின்னர் சடலமாக மீடகப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொஹுவலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலை மாணவன் ஒருவரைக் கூரிய ஆயுதத்தைக் காட்டி அச்சுறுத்தி மாணவனின் பணப்பையைப் பறித்துச் சென்ற நபர் பொதுமக்களால் கற்களால் தாக்கப்பட்ட நிலையில் தப்பியோடினார்.

பின்னர் அந்த நபரின் சடலம் நுகேகொட, நலந்தாராம வீதியில் நடைபாதை பாதைக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டது.

உயிரிழந்தவரின் தலையின் பின்புறம் மற்றும் காதுக்கு அருகில் காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொஹுவலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜே.வி.பி. செய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தோருக்குத் தண்டனை வழங்கப்படும் அதேவேளை, ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்த ஜே.வி.பி.யினருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா வலியுறுத்தினார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"ஏதேனும் குற்றங்கள் தொடர்பில் ஆணைக்குழுக்களை அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பது வழமையான தொரு செயற்பாடாகும். ஆனால், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மிகப் பழையதாகும். 1994ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசில் ஜே.வி.பி. அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்தது.

2005 இல் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு இவர்களே பிரதானமாகச் செயற்பட்டனர். அந்தக் காலத்தில் ஏன் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்பது சந்தேகத்துக்குரியது. தற்போதைய காலத்தின் தேவை ஜே.வி.பியினரால் செய்யப்பட்ட கொலைகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாகும்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை முன்னிலைப்படுத்தி கடந்த காலங்களில் ஜே.வி.பி. செய்த கொலைகளை மறைப்பதற்கு இடமளிக்கக் கூடாது. பட்டலந்தையில் குற்றமிழைத்தோருக்குத் தண்டனை வழங்கப்படும் அதேவேளை, ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று குவித்த ஜே.வி.பி.யினருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நியாயமாகச் செயற்படுகின்றது என்றால், இது தொடர்பில் புதியதொரு ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும். ஆயிரக்கணக்கானோர் அந்தக் குழுவில் சாட்சியமளிப்பர்." – என்றார்.

## பொலிஸ், பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிபலனாகவே பொலிஸ் திணைக்களத்துக்கும், பதில் பொலிஸ்மா அதிபருக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

இந்த முரண்பாடுகள் பொலிஸ் ஆணைக்குழு வரை தொடர்கின்றது. இதனால் முழுப் பாதுகாப்பு கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது. நாட்டில் சட்டம் என்பதொன்று கிடையாது என்று ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக் குழுக்கள் கருதுகின்றனர்.

தமக்கு இணக்கமானவரைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கும் அளவுக்கு பொலிஸ் சேவை இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவை மாத்திரமல்ல, பாதுகாப்பு சேவை உட்பட புலனாய்வுப் பிரிவும் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவை உட்பட பாதுகாப்பு சேவைகள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. பொலிஸ்மா அதிபரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளனர். இது உலக நகைச்சுவையாகும்.

தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸார் கைது செய்யமாட்டர்கள். உயர்நீதிமன்றத்தின் ஊடாகப் பிணை பெற்றுக் கொள்வதற்கு தேசபந்துக்குச் சாதகமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. அதுவரையில் அவர் கைது செய்யப்படமாட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய குடியரசு முன்னணியின் சார்பில் பென்சில் சின்னத்தில் போட்டியிடுவோம்." – என்றார்.




# தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நள்ளிரவுடன் நிறைவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

எனவே, இதுவரை விண்ணப்பிக்காத தகுதியுள்ளவர்கள் தபால் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி,இன்று நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேலும், தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான திகதி எந்த சூழ்நிலையிலும் நீடிக்கப்படாது என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# உள்ளூராட்சி வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ள அவதானம் செலுத்த வேண்டும்

## ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்லில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் சுயேட்சை குழுக்கள் தங்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ள மிகவும் அவதானம் செலுத்தவேண்டும் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுகள் இன்றுமுதல் ஏற்றுக்கொள்ளப்பட இருப்பதால் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெற இருக்கிறது.

தேர்தில்ல போட்டியிட இருக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் தங்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் விடயங்கள் தொடர்பில் அதிக வகனம் செலுத்த வேண்டும்.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அந்த விடயங்கள் தொடர்பில் மிகவும் அவதான் செலுத்தி வேட்புமுமனுக்களை பூரணப்படுத்த வேண்டும்.

குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவ கோட்டாவை வழங்காமல் இருப்பது, பிறப்புச்சான்றிதழ் வழங்காமல் இருப்பது, பெண்கள் என்பதை உறுதிப்படுப்படுத்துவதற்கான சத்தியக்கடதாசிகள் போன்ற ஆவணங்களை வழங்காமை காரணமாக கடந்த தேர்தல்களின் போது அதிகமான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்ததை நாங்கள் கண்டோம்.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 162 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதேநேரம் பல வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தன.

அதனால் நிராகரிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ள அரசியல் கட்சிகள் வேட்புமனுக்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் மிகவும் அவதானம் செலுத்தவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இந்தமுறை தேர்லில் அதிகமான கட்சிகள் போட்டியிடும் வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக அதிகமான சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தி இருக்கிறது.

அதனால் கட்சிகள் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்களை வேட்பாளர்களாக பெயரிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.



வாக்காளர்கள் கட்சிக்கே வாக்களிக்க இருப்பதால் கட்சிகள் திறமையான வேட்பாளர்களை களமிறக்க தவறினால், அந்த கட்சிகள் வாக்காளர்களால் நிராகரிக்கப்படும் நிலை இருக்கிறது.

அதேநேரம் வேட்புமனு தாக்கல் செய்யும்போது வேட்பாளர்கள் தங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையையும் சமர்ப்பிக்கவேண்டி இருக்கிறது.

வேட்பாளர்கள் தங்களின் முகப்புத்தகத்தில் அல்லது இணையத்தளத்தில் இதனை பதிவேற்ற முடியும். வேட்பாளர்கள் தங்களின் தூய்மையான அரசியல் பிரவேசத்தை உறுதிப்படுத்த தங்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கையை பெப்ரல் சுயாதீன தேர்ல்கள கண்காணிப்பு குழுவுக்கு கையளிப்பதாக இருந்தால் அதனை பெற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்..

அத்துடன், தேர்தல் செலவு சட்டம் இந்த தேர்தலின்போதும் அமுல்படுத்தப்படும். அதனால் வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் செலவுகள் தொடர்பில் நாளாந்தம் பதிவு செய்துகொள்வதன் மூலம் இதனை தேர்தல் நிறைவடைந்து 21 நாட்களுக்குள் கையளிப்பது சிரமமாகாது.

அதனால் வேட்பாளர்கள் யாராவது தேர்தல் முடிவடைந்து 21 நாள்களுக்குள் கையளிக்க தவறினால் அவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம், அதேநேரம் அவர்கள் எதிர்வரும் 5 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாமல் போகலாம். அதனால் இதுதொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.”- என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் அணுகுமுறை

பட்டலந்த வதை முகாம் பற்றிய ஆணைக் குழுவின் அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்திருக்கின்றார். அது பற்றி விரிவான அறிக்கை ஒன்றையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி கட்டவிழ்ந்து உச்சம் பெற்றிருந்த காலத்தில், தமது தொகுதியில் இருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக, அப்பகுதியில் பாதுகாப்பு தரப்பினருக்கு வீடுகள், தங்குமிடங்களைத் தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு தம்மிடம் வழங்கப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

அந்த இடங்களைத் தேடிப் பெற்றுக் கொடுத்தமை தொடர்பாகவே அந்த ஆணை குழு அறிக்கையில் தன் மீது சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன என அவர் அந்த அறிக்கையில் கோடி காட்டி இருக்கிறார்.

வீடுகளைப் பொறுப்பேற்று, பொலிஸ்மா அதிபர் மூலம் கையளிக்காமல், நேரடியாக சம்பந்தப்பட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கியமை தவறு என்ற சாரப்பட தம் மீது அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க விளக்கம் கூறுகின்றார்.

அது உண்மையாக இருக்கலாம். அப்படிப் பார்த்தால் யுத்த காலத்தில் தமிழர் தாயகத்தில் தமிழ்ப் பொது மக்களிடம் இருந்து சூறையாடப்பட்ட பல்லாயிரம் வீடுகள், காணிகள், சொத்துக்கள் இற்றைவரை உரிய முறையில் கையாளப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க மேற்படி பட்டலந்த வதை முகாம் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டு இருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், இலங்கையில் யுத்தகாலத்தில் தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடி, ஆக்கிரமித்தவர்கள் பல்லாயிரம் பேர் இப்போது வரிசையாக அதே குற்றச்சாட்டுக்காக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர்களிடமிருந்து சட்ட விரோதமான முறையில் பிடுங்கப்பட்ட நிலங்களை பல தசாப்தங்களாக ஆக்கிரமித்துக் கையாண்டு, அவற்றில் கட்டடங்கள் கட்டி, மூன்றாம் தரப்புகளுக்கு அரசாங்கமே சட்ட விரோதமாக வாடகைக்கு கொடுக்கின்ற அநியாயம் இந்த நாட்டில் இன்று வரைத் தாராளமாக நீடிக்கும் போது, ஜே.வி.பியின் கலவரங்களை - கிளர்ச்சியை - அடக்குவதற்காகப் பாதுகாப்பு தரப்பினருக்கு சில வீடுகளை பெற்றுக் கொடுத்த தொகுதி எம்.பி. ரணிலின் செயல் பெரிய குற்றமாகக் கருதப்படக் கூடியது அல்ல. அவற்றையும் தாண்டி, ரணில் வேறு என்ன செய்தார் என்பதுதான் கேள்வி.

ஆயினும் இந்த விவகாரம் - பட்டலந்த வதை முகாம் விடயம் - பூதாகரமாகி மோசமான நிலைமை ஏற்படுவதற்கு அல்ஜஸீரா பேட்டியில் சம்பந்தப்பட்ட கேள்விக்கு ரணில் விக்கிரமசிங்க திமிராக - எடுத்தெறிந்து - பதிலளித்த போக்கும் காரணம் என்பதை அவர் மறந்து விடக் கூடாது.

பட்டலந்த வதை முகாம் ஆணைக்குழு அறிக்கை பற்றி செய்தியாளர் கேட்டதும் ‘அப்படியா? அது என்ன அறிக்கை? அப்படி ஒன்று இல்லை, நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை’ என்று தெரியாத மாதிரி பாசாங்கு பண்ணிய ரணிலின் திமிர்த்தனம் ஏற்கத்தக்கதல்ல.

அவர் ஜனாதிபதியாக இருந்த போது, நாட்டில் தேர்தல் ஆணையத்தினால் உள்ளூராட்சித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, வாக்குச்சீட்டுக்களும் ஒரு பகுதி அச்சடிக்கப்பட்ட நிலையில் - தம்முடைய ஐக்கிய தேசியக் கட்சி மூலமே பல இடங்களில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துவிட்டு - அந்தத் தேர்தலை தொடர்ந்து கொண்டு நடத்துவதற்கான பணத்தை நிதியமைச்சர் என்ற முறையில் வழங்காமல் வெட்டித் தேர்தலையே தடுத்து முழுங்கிவிட்டு - ‘தேர்தலா? அப்படி ஒன்று நாட்டில் இப்போது இல்லையே!’ என்று திமிர்த்தனமாகப் பேசியவர் ரணில். அதே பாணியில் திமிர்த்தன பதிலை அல்ஜஸீரா பேட்டியிலும் கூறி, அந்தச் செவ்வியையே சொதப்பி, நிலைமையைக் குழப்பி இருக்கின்றார் அவர்.

உண்மையில் ஜே.வி.பியின் அடாவடித்தனங்கள் - அட்டகாசங்கள் - அட்டூழியங்கள் - கொடூரங்கள் - நிறைந்த அந்தக் கால விடயங்கள் பற்றிய உண்மைகளை உரைக்கும் பட்டலந்த வதை முகாம் அறிக்கையை ஜே.வி.பி. அரசே துணிச்சலாக வெளியிடக்கூடிய நிலைக்கு - மோசமான கட்டத்துக்கு - இந்த விவகாரத்தைக் கொண்டு வந்தது ரணிலின் அரசியல் முட்டாள்தனமன்றி - எடுத்தெறிந்து திமிர்த் தனமாகப் பதிலளிக்கும் போக்கன்றி - வேறில்லை.

இப்போது, நேற்றைய அறிக்கையில் விளக்கமாகக் கூறும் விடயங்களை அல்ஜஸீராப் பேட்டியில் அமைதியாக - எடுத்தெறிந்து பதிலளிக்காமல் - நாசூக்காக முன்வைத்திருந்தால், பட்டலந்த விடயம் அதிலேயே, அங்கேயே, அடங்கி இருக்கும். மாறாக, திமிர்த்தனப் பாணியில் பதிலளித்து, இப்போது விளைவை வாங்கிக் கட்டியிருக்கின்றார் அவர். அவ்வளவுதான்!



# மெதிரிகிரிய இசை நிகழ்ச்சியில் குழப்பம் விளைவித்த 6 பேர் கைது

மெதிரிகிரிய, திவுலன்கடவல பகுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் குழப்பத்தை விளைவிக்கும் வகையில் செயற்பட்ட 06 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான காணொலிகளை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடகர்கள் முன்கூட்டியே அறிவித்தமைக்கமைய வருகை தராமை காரணமாக இந்த இசை நிகழ்ச்சியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

ஏற்பாட்டாளர்களால் பாடகர்களுக்காக வழங்கப்பட விருந்த பணம் தொடர்பில் எழுந்த பிரச்சினையே இதற்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இசை நிகழ்ச்சியை பார்வையிட சென்றிருந்த சிலரால் ஏற்பட்ட அமைதியின்மையின் போது ஒலிபெருக்கிகள், இசைக்கருவிகள், கதிரைகள் என்பவற்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் காணொலிகளுக்கு அமைய விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.



# மஹாவெல பிசோ எல்ல நீர்வீழ்ச்சியில் தவறி வீழ்ந்து இளைஞர் உயிரிழப்பு

மாத்தளை - மஹாவெல பிசோ எல்ல நீர்வீழ்ச்சியில் தவறி வீழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கொழும்பு - நுகேகொட பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் நேற்று பிசோ எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்றபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.






# கிளிநொச்சியில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களை நேற்று நேரில் பார்வையிட்டார் வடக்கு ஆளுநர்

கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாற்றில் முன்னெடுக்கப்படும் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தையும், புழுதியாற்றில் கைவிடப்பட்டுள்ள ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தையும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று ஞாயிற்றுக் கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 500 ஏக்கரில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார். அங்கு சூரியமின்கலம் (சோலர்) மூலமான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படுவதால் ஏற்று நீர்ப்பாசனத்துக்காக விவசாயிகளிடமிருந்து குறைவான தொகையே அறவிடப்படுவதாக ஆளுநருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்மூலம் 30 மில்லியன் ரூபா வரையில் இலாபம் பெறப்பட்டுள்ளது எனவும், அதனைப் பயன்படுத்தி மேலதிக சூரியமின்கலம் மூலமான மின்சார உற்பத்தியை அதிகரித்தால் விவசாயிகளிடமிருந்து மாதாந்தம் பெறப்படும் தொகையைக் குறைக்க முடியும் எனவும் கிளிநொச்சி மாவட்ட செயலர் இதன்போது ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

இதன் பின்னர் புழுதியாற்றுக்குளம் மற்றும் புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை ஆளுநர் சென்று பார்வையிட்டார். 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2018ஆம் ஆண்டு கைவிடப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். 70 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு 70 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. சூரிய மின்கலம் மூலமான மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு அதனை வழங்குவதன் மூலம் விவசாயிகளிடமிருந்து குறைந்த தொகையைப் பெற்று இதனைச் செயற்படுத்த முடியும் என நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆளுநருக்கு விளக்கமளித்தார்.

புழுதியாற்றுக் குளத்தையும் ஆளுநர் பார்வையிட்டார். குளத்தின் அணைக்கட்டு புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் விவசாயிகள் இதன்போது குறிப்பிட்டனர்.

கமநலசேவைகள் திணைக்களத்திடமிருந்து குளத்தை நீர்பாசனத் திணைக்களத்துக்கு உள்வாங்குவதற்கும் ஏனைய தொடர் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

### பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை:

# சட்டமா அதிபரால் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்ய முடியும்



## முன்னாள் மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டு

“பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய சட்டமா அதிபர் திணைக்களம் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய புதிய அரசமைப்பில் “மக்கள் உயிர் வாழும் உரிமை“யை உள்ளடக்க வேண்டும்.”

– இவ்வாறு முன்னாள் மனித உரிமை ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பட்டலந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு தமது அறிக்கையில் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. விரிவான சாட்சிகள் கோரப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அரசு பட்டலந்த விசாரணை அறிக்கையின் மூலப் பிரதியை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

பட்டலந்த விசாரணை அறிக்கையில் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் “மக்கள் உயிர் வாழும் உரிமை” உள்ளடக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே உத்தேச புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போது “மக்கள் உயிர் வாழும் உரிமை“யை உறுதிப்படுத்த வேண்டும்.” – என்றார்.

பட்டலந்த வீட்டுத் தொகுதியில் சட்டவிரோத தடுப்பு முகாம் மற்றும் சித்திரவதை முகாம் அமைத்து அவற்றை நடத்திச் சென்றமை தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையைச் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பில் ஆராய்வதற்கு உப குழு ஒன்றை நியமிப்பதற்கும், அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதலாவது விவாதத்தையும், மே மாதம் இரண்டாவது விவாதத்தையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




# மாளிகாபிட்டிய விபத்தில் கார்ச் சாரதிக்குக் காயம்

**(உடப்பு க.மகாதேவன்)**

குருநாகல் – தம்புள்ள வீதி மாளிகா பிட்டிய விளையாட்டு மைதானத்துக்கு முன்னால் நேற்று லொறியுடன் கார் மோதியதில் ஏற்பட்ட வாகன விபத்தில் காரின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன், கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகக் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.





# பரீட்சை நிலையத்திற்குள் கையடக்க தொலைபேசி கொண்டு செல்ல தடை

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி, ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் 4,74,147 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3,98,182 பரீட்சார்த்திகள் பாடசாலை விண்ணப்பதாரிகள் எனவும், 75,965 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்காக நாடளாவிய ரீதியில் 3,663 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அனைத்து பரீட்சார்திகளும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரத்மலானை, தங்காலை, மாத்தறை மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளில் விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மெகசின் சிறைச்சாலை மற்றும் வட்டரக்க சுமேதா வித்தியாலயத்தில் சிறைக்கைதிகள் மற்றும் புனர்வாழ்வு பெற்றுவரும் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையிலும் பரீட்சை நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கையடக்க தொலைபேசிகள், ஸ்மார்ட் கடிகாரம் உள்ளிட்ட கையடக்க தொலைபேசிகளுடன் இணைக்கக்கூடிய அனைத்து உபகரணங்களைப் பரீட்சை நிலையத்திற்குள் கொண்டுசெல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் நேரம் தாழ்த்தி பரீட்சை நிலையத்திற்குச் செல்லும் நிலைமையினை கடந்த காலங்களில் காணமுடிந்தது.

எனவே, இந்த நிலைமையினை தவிர்த்து அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய நேரத்திற்குப் பரீட்சை நிலையத்திற்குச் செல்லுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வலியுறுத்தியுள்ளார்.



# சிவனொளிபாதமலைக்குப் போதைப்பொருள்கள் கொண்டு சென்ற 11 பேர் கைதாகிப் பிணையில்!

(மஸ்கெலியா நிருபர்)

பல்வேறு போதைப்பொருள்களை எடுத்துக்கொண்டு ஹட்டன் வழியாக சிவனொளிபாதமலைக்கு வந்த 11 பேரை கைது செய்த செய்த பொலிஸார் அவர்களை ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

ஹட்டன் மாவட்ட நீதிபதி மற்றும் நீதிவான் எம். பாருக், சந்தேக நபர்களை தனிப்பட்ட பிணையில் விடுவித்து மீண்டும் நீதிமன்றத்தில் நாளை செவ்வாய்க்கிழமை ஆஜராக உத்தரவிட்டார்.

சிவனொளிபாதமலைக்கு வரும் போது பல்வேறு போதைப்பொருள்களை எடுத்துச் செல்லும் நபர்களைக் கைது செய்வதற்காக நல்லத்தண்ணி பொலிஸார் இந்த மாதம் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மேற்கொண்ட நடவடிக்கையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டனர் என நல்லத்தண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இ.ஏ.பி.எஸ். வீரசேகர தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் 25 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்று 123 தரப்புகள் யாழ். மாவட்டத்தில் இதுவரை கட்டுப்பணம் செலுத்தின

(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளுக்கு இதுவரை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என 123 தரப்புகளினால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இதுவரை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஏழு தரப்புகளும்,வல்வெட்டித்துறை நகர சபைக்கு எட்டுத் தரப்புகளும், பருத்தித்துறை நகர சபைக்கு எட்டுத் தரப்புகளும், சாவகச்சேரி நகர சபைக்கு எட்டுத் தரப்புகளும், காரைநகர் பிரதேச சபைக்கு எட்டுத் தரப்புகளும், ஊர்காவற்துறை பிரதேச சபைக்கு ஐந்து தரப்புகளும். நெடுந்தீவு பிரதேச சபைக்கு ஐந்து தரப்புகளும்,வேலணை பிரதேச சபைக்கு எழு தரப்புகளும், வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு எழு தரப்புகளும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு எழு தரப்புகளும், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு ஏழு தரப்புகளும், வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கு எட்டு தரப்புகளும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு எட்டுத் தரப்புகளும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு எட்டுத் தரப்புகளும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு ஒன்பது தரப்புகளும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு எழு தரப்புகளும்,

நல்லூர் பிரதேச சபைக்கு ஆறு தரப்புகளும் என மொத்தமாக 123 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய ஐந்து அரசியல் கட்சிகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடக் கட்டுப்பணத்தை செலுத்தின.

தமிழ் மக்கள் கூட்டணி இதுவரை 14 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடக் கட்டுப்பணத்தைச் செலுத்தியது. அது வல்வெட்டித்துறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, ஊர்காவற்துறை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி எட்டு உள்ளூராட்சி சபைகளிலும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடக் கட்டுப்பணத்தை செலுத்தின.

சாவகச்சேரி பிரதேச சபையில் போட்டியிட தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியும் காரைநகர் பிரதேச சபையில் போட்டியிட சோசலிச சமத்துவக் கட்சியும் கட்டுப்பணத்தைச் செலுத்தின.



# கச்சதீவில் 10 ஆயிரம் பேரின் நலனை கையாள இயலாத திருவிழா நிர்வாகம்

(ந.லோகதயாளன்)

கச்சதீவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட நாட்டின் நீதிபதிகள், அயல் நாட்டுத் தூதுவர்கள் போன்ற பிரமுகர்கள் கசக்கிப் பிழியப்பட்டு நெருக்கடியான அனுபவங்களுடன் கொண்டு வரப்பட்ட நிலைமை பெரும் மனக் கசப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை - இந்தியா இடையே உள்ள கச்சதீவு இலங்கை, இந்திய மீனவர்களின் சர்ச்சையாகி இரு நாடுகளின் கேந்திர விவகாரமாக சிக்கித் தவிக்கும் அதே நேரம், அந்த தீவிற்கு ஆண்டிற்கு ஒரு தடவை சென்று வருவது தொடர்பான விவகாரத்தை நிர்வகிக்க முடியாமல் அதிகாரிகள், கடற்படையினர் திணறுகின்றனர்.

2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளி மார்ச் 14 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, அடுத்த நாள் சனிக்கிழமை மார்ச் 15 கொடி இறக்கத்துடன் முடிவுற்றது. இந்தியாவில் இருந்து 80 படகுகளில் 3, 200 பேர் வருகை தந்த அதேநேரம் இலங்கையில் இருந்து 5,600 பேர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு கலந்துகொண்ட இலங்கை யாத்திரிகர்கள் எத்தனை படகில் பங்கு கொண்டனர் என தெரிவிக்க முடியாத அவலமே அதிகாரிகள் பக்கத்தில் உள்ளது. ஏனெனில் பல படகுகள் இரண்டு, மூன்று தடவை சேவையில் ஈடுபட்டன.

மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்து முன் அனுமதி பெற்ற அரச நிர்வாக அதிகாரிகள், நீதிபதிகள், ஊடகவியலாளர்கள் 14 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு குறிகட்டுவானில் இருந்து நெடுந்தாரகை மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். அதே நெடுந்தாரை குறிகட்டுவான் திரும்பி 15 ஆம் திகதி அதிகாலையில் ஆளும் கட்சி அமைச்சர் குழுவில் 12 பேர், நாடாளுமன்ற உறுப்பினருடன் 8 பேர், இந்தியத் தூதரக அதிகாரிகள் 12 பேர், மாவட்டச் செயலாளர், பிரதம செயலாளர், ஒரு நீதியரசர் உட்பட பல முக்கியஸ்தர்களை கச்சதீவு அழைத்துச் சென்றது.

பூசை நிறைவுற்று காலை 10 மணியளவில் அனைவருமே ஒன்றாக வெளியேற முற்பட்டபோது ஒரேயொரு நெடுந்தாரகை மட்டுமே தயாராக நிற்கின்றது. அதில் உச்ச பட்சம் 100 பேரை ஏற்ற முடியும். 3 நீதிபதிகள், அவர்கள் உதவியாளர்கள், பிரதம செயலாளர், மாவட்டச் செயலாளர், சுகாதாரத் துறையினர், இந்திய தூதரக அதிகாரிகள் மட்டுமன்றி அமைச்சரின் குழு, நாடாளுமன்ற உறுப்பினர் குழு என அனைவரும் படகில் ஏற அலை மோதுகின்றனர். இதன்போது பாதையின் குறுக்கே நிற்கும் மக்களோ வழி விட மறுத்து தம்மையும் அழைத்துச் செல்லுமாறு குரல் எழுப்புகின்றனர்.

இதன் பின்பு கடற்படையினர் கடலில் நீச்சலடிச்ச அனுபவத்தில், தரையில் மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் நீச்சல் அடித்து, அதிதிகளை படகேற்ற முற்பகல் 11 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரை முயற்சித்தனர். அதிகாரிகளை அழைத்துச் செல்ல முடியாது இழுத்துச் சென்றனர் என்று கூறலாம். இதன்போது தூதரக அதிகாரி இவ்வாறு கேவலம் கெட்டு பயணிக்க முடியாது எம்மை இறக்கி விடுங்கள் என கெஞ்சினர் என்றும் கூறப்பட்டது. நீதியரசரோ கடும் நெருக்குதலினால் திணறி ஏறக்குறைய அவமானப்பட்டு கூனிக் குறுகிப் படகேறினார். இன்னுமோர் நீதிவானை ஒருவாறு அடித்துப் பிடித்து படகில் ஏறியபோதும் அவரின் உதவியாளரில் இருவரை ஏற்ற மறுத்தபோது, அவ்வாறானால் என்னை இறக்கி விட்டு அவர்களை அழைத்துச் செல்லுங்கள் என நீதிவான் கூறிய சமயம், அப்போது அந்த இடத்தில் நின்ற கடற்படை அதிகாரி அது உங்கள் விருப்பம் எனப் பதிலளித்தமையால், நீதிவான் உதவியாளர்கள் சகிதம் நெடுந்தாரகையில் இருந்து கச்சதீவிலேயே தரை இறங்கி விட்டார்.

அதன் பின்பு 12 மணிக்கு நெடுந்தாரகை குறிகட்டுவான் நோக்கிப் பயணித்தது. அந்த நெடுந்தாரகையில் 15 ஆம் திகதி காலையில் வந்த ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழுவும் அமைச்சர் குழுவும் தங்கு தடையின்றிப் பயணித்துத் திரும்பினர்.

கச்சதீவில் மீள இறங்கிய நீதிவான் பின்னர் காங்கேசன்துறை நோக்கி பலரை ஏற்றிச் சென்ற கடற்படை கப்பலில் 2 மணிக்கு புறப்பட்டு, மாலை 5.30 மணிக்கு காங்கேசன்துறையை அடைந்தார். குறிகட்டுவானில் நீதிவானிற்காக காத்திருந்த வாகனம் பின்னர் காங்கேசன்துறை திரும்பி நீதிவானை அழைத்துச் சென்றது.

இவ்வாறு ஏற்பட்ட நெருக்கடிகள், வலிகள், இடையூறுகள் தொடர்பில் அயல்நாட்டுத் தூதரகம் கடும் தொனியில் இன்று வெளிவிவகார அமைச்சிற்கு எழுத்தில் தனது அதிருப்தியை அனுப்புவதோடு அதன் பிரதியை மாவட்டச் செயலாளருக்கும் அனுப்புகின்றது எனத் தெரிகின்றது. அவ்வாறே நீதிபதிகள் தரப்பிலும் அவர்களது தரப்பு அதிருப்தி எழுத்தில் அனுப்பப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

கச்சதீவில் யாத்திரிகர்களிற்கு வழங்கப்பட்ட உணவு பழுதடைந்து காணப்பட்டதனால் யாத்திரகர்கள் பெரும் மனக் கவலை வெளியிட்டமை மட்டுமன்றி அந்த உணவை எடுத்துச் சென்று அங்கே பணியில் இருந்த சுகாதார உத்தியோகத்தர்களிடம் இந்த உணவை கடையில் விற்பனை செய்தால் அனுமதிப்பீர்களா எனக் கோரவும் தவறவில்லை. இருந்தபோதும் அதற்கு அப்போது பதிலளிக்கும் மனத் தைரியத்தில் சுகாதார உத்தியோகத்தரும் இருக்கவில்லை.

ஆக மொத்தம் திருவிழா சிறப்பாக இடம்பெற்றது, நிர்வகிப்பு சீரழிந்து காணப்பட்டமை தொடர்பில் உரிய தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனத் தெரிகின்றது.

இந்திய யாத்திரிகர்களை ஏற்றி வரும் படகுகள், அவர்களை மீள ஏற்றிச் செல்வதற்காக அங்கேயே தரித்து நிற்பதுபோல் இலங்கை யாத்திரிகர்களை ஏற்றும் படகுகள் திருவிழா முடியும் நாள் காலையிலேயே தயாராகக் காத்திருப்பின் இத்தகைய பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

மாறாக முதல்நாள் வந்தவர்கள் மறுநாள் மாலை வரையிலும் காத்துக் கிடக்க, திருவிழா இறுதி நாள் காலை 6 மணிக்கு வந்தவர்கள உடனேயே நண்பகல் 11 மணிக்கு திரும்புவதாகப் பட்டியலிட்டால் இதுதான் நடக்கும் என மூத்த அதிகாரிகள் தமது மன ஆதங்கத்தைப் பதிவு செய்தனர்.




# இன்று ஆரம்பமாகும் சாதாரண தர பரீட்சை பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டியவை!



வி.ரி.சகாதேவராஜா
(ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த.சா/த பரீட்சை இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நிறைவடைகிறது.

இலங்கையின் பொதுப் பரீட்சைகள் கொரோனா காரணமாக உரிய வேளையில் நடாத்த முடியாமல் தாமதித்து நடாத்தப்பட்டு வந்தமை தெரிந்ததே.

அக்கலாசாரம் இந்த ஆண்டுடன் நிறைவுக்கு வருகிறது என பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சரி, அது பரீட்சை தொடர்பான அறிமுகம். இனி பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் ஆயத்தமாகவேண்டிய சில முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வோம்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் சில விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவதாக பரீட்சை நிலையத்திற்கு பரீட்சார்த்தி ஒருவர் செல்லும்போது, பரீட்சை அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டை,பேனா, பென்சில் மற்றும் அழிறப்பர்,கணித உபகரணங்கள் போன்றவற்றை மாத்திரம் தம்முடன் எடுத்துச் செல்லல் வேண்டும்.

எந்தவொரு தொழில்நுட்ப சாதனங்களையும் எடுத்துச் செல்லக் கூடாது.

அடுத்து பரீட்சை ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன், பரீட்சை மண்டபத்திற்குச் சென்று உரிய சுட்டிலக்கம் கொண்ட மேசை கொண்ட கதிரையில் அமர வேண்டும்.

உதாரணமாக மு.ப.8.30 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும் எனில், மு.ப.8.00 மணிக்கு பரீட்சை மண்டபத்திற்குச் செல்ல வேண்டும்.

பி.ப.1.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும் எனில் பி.ப 12.30 மணிக்கு பரீட்சை மண்டபத்திற்குச் செல்ல வேண்டும்.

பரீட்சை ஆரம்பித்து, 30 நிமிடங்கள் தாமதமாக வருகை தரும் மாணவர்களுக்கு வினாத்தாள் வழங்கப்படும். எனினும் தாமதித்து வருகை தந்த நேரத்திற்கு, மேலதிக நேரம் வழங்கப்படமாட்டாது.

தாமதமானவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பரீட்சை ஆணையாளர் ஜீவராணி புனிதா அறிவித்துள்ளார்.

அடுத்து, பரீட்சைக் காலங்களில் உட்கொள்ளும் உணவுகளில் அவதானம் தேவை. வயிற்றைக் குழப்பும் உணவு வகைகளை தவிர்க்கவும்.

அணியும் சீருடை ஆடைகள் பாதணிகள் சுத்தமாக இருக்க வேண்டும். அதேவேளை பரீட்சார்த்தியும் சுத்தமாக இருக்க வேண்டும்.

வீடுகளில் பரீட்சைக்கு தயார் செய்வதற்கான அத்தனை உதவி ஒத்தாசைகளையும் அதற்கேற்ற அமைதியான உவப்பான சூழலையும் பெற்றோர் ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது அவர்களது கடமையாகும்.

வீடுகளில் பரீட்சைக் காலங்களில் தொலைக்காட்சி, வானொலிகளை தவிர்த்தல் நலம்.

அனைவரும் சிறப்பாக சித்தியடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.



# கேதார்நாத்தில் இந்துக்கள் அல்லாதவர்களை தடை செய்ய வேண்டும்: புதிய பரிந்துரை

கேதார்நாத் ஆலயத்தில் இந்துக்கள் அல்லாதவர்கள் நுழைவதை கட்டுப் படுத்த வேண்டும் என்று உத்தரகண் டின் பாரதிய ஜனதாக் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் ஆஷா நௌடியல் தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற் படுத்தியுள்ளது.

இந்துக்கள் அல்லாத சிலர் மத தலத்தின் புனிதத்திற்கு தீங்கு விளை விக்க முயற்சிக்கின்றனர் என கேதார் நாத் சட்டமான உறுப்பினர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக, உள் ளூர் அதிகாரிகள் மற்றும் குடியிருப் பாளர்களுடன் பொறுப்பு அமைச்சர் சவுரப் பகுகுணா அண்மையில் ஒரு கூட்டம் நடத்தினர் என நௌடியல் குறிப்பிட்டார்.

இதன் போது சில பங்கேற்பாளர் கள், இந்து அல்லாத நபர்கள் கேதார் நாத் தாமின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க முயற்சிக்கின்றனர் என அவர் கூறினர்.

அத்தகைய நபர்களை அடை யாளம் கண்டு, அந்த இடத்திற்குள் நுழைவதைத் தடுக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்த உத்தரகண்ட் முன்னாள் முதல்வர் ஹரிஷ் ராவத், பா.ஜ.க. தலைவர்கள் பரபரப்பான கருத் துக்களை வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர் என்று கூறினார்.

சார் தாம் யாத்திரை ஏப்ரல் 30 ஆம் திகதி அக்ஷய திருதியை அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. அப் போது கங்கோத்ரி மற்றும் யமு னோத்ரி ஆலயங்களின் கதவுகள் திறக்கப்படுகின்றன.

கேதார்நாத் ஆலயத்தின் வாயில் கள் மே 2 ஆம் திகதியும், பத்ரி நாத் ஆலயத்தின் வாயில்கள் மே 4 ஆம் திகதியும் திறக்கப்படும் நிலை யில் இந்தக் கருத்துக்கள் வந்துள் ளன.

## ஏ.ஆர்.ரஹ்மானின் முன்னாள் மனைவி என்று சொல்ல வேண்டாம்: சாய்ரா பானு அறிவிப்பு



ஏ.ஆர்.ரஹ்மானின் முன்னாள் மனைவி என தன்னை அழைக்க வேண்டாம் என சாய்ரா பானு தெரி வித்துள்ளார்.

தாங்கள் இருவரும் விவாக ரத்துபெறவில்லை, பிரிந்துவாழ்ந்து வருகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ரஹ்மான் விரைந்து குண மடைய வேண்டுகிறேன். நாங்கள் இருவரும் இன்னும் சட்டபூர்வ மாக விவாகரத்து பெறவில்லை என்பதை தெளிவாக தெரிவித் துக் கொள்கிறேன். நாங்கள் இருவரும்கணவன், மனைவிஎன்ற பந்தத்தில் இருக்கிறோம். கடந்த 2 ஆண்டுகளாக எனது உடல் நிலை சரியில்லாத காரணத் தால் நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

அவருக்கு எந்த வகையி லும் நான் அழுத்தம் தர விரும்ப வில்லை. அதனால் என்னை ஏ.ஆர்.ரஹ்மானின் முன்னாள் மனைவிஎன்று சொல்லவேண்டாம் என ஊடகங்கள் வசம் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் பிரிந் திருந்தாலும் அவருக்காக இறை வனை வேண்டிக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட இசை யமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

திடீர் உடல்நலக் குறைவு காரண மாக அவர் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் வைத் தியசாலையில் நேற்று காலை அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து சிகிச்சை நிறை வடைந்ததும் அவர் வைத்திய சாலையிலிருந்து வெளியேறி யுள்ளார் என அப்பல்லோ வைத்திய சாலை நிர்வாகம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நகைச்சுவை நடிகை பிந்து கோஷ் காலமானார்



நகைச்சுவை நடிகை பிந்து கோஷ் உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

80 களில் ரஜினிகாந், கமல், சத்யராஜ் உள்ளிட்ட முன்னணி நடிகர்களின் படங்களில் இவர் நடித்து இரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றவர்.

கோழி கூவுது திரைப்படம் மூலம் நடிகையாக அறிமுகமாகிய பிந்து கோஷ் தொடர்ந்து உறவுகள் மாறலாம், தூங்காதே தம்பி தூங்காதே, மங்கம்மா சபதம், விடுதலை போன்ற பல்வேறு படங்களில் நடித்துள்ளார்.

கிட்டத்தட்ட நூறு படங்களுக்கு மேல் நடித்திருக் கும் இவருக்கு தற்போது 76 வயதாகிறது.

வயது மூப்பின் காரணமாக கடந்த சில வருடங் களாக உடல்நலப் பிரச்சினையை எதிர்கொண்டுவந் தார்.

இந்த நிலையில், நேற்று மதியம் 2 மணியளவில் அவர் உடல்நலக் குறைவால் காலமாகியுள்ளார் என தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.



# அமெரிக்க வான்வழி தாக்குதலில் ஐ.எஸ். தலைவர் அபு கதீஜா பலி

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அபு கதீஜா என அழைக்கப்படும் அப்துல்லா மக்கிமுஸ்லிஹ் அல்-ரிஃபாய், அமெரிக்க வான்வழி தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈராக்கின் அல் கான் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட வான்வழி தாக்குதலின் போது அவர் கொல்லப்பட்டுள்ளார் என அமெரிக்காவும் ஈராக்கும் உறுதிப்படுத்தியுள்ளன.

உலகிலேயே ஆபத்தான பயங்கரவாத நபர்களின் பட்டியலில் ஒருவராக அபு கதீஜா கருதப்படுகிறார் என அமெரிக்கத் தரப்பு கூறியுள்ளது.

இந்த தாக்குதலை அமெரிக்க மற்றும் ஈராக் உளவுத்துறை இணைந்து நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்தத் தாக்குதலில் மற்றொரு சக்திவாய்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ் உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஈராக்கில் தப்பி ஓடிய ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவர் கொல்லப்பட்டார். எங்கள் துணிச்சலான போராளிகள் அவரை இடைவிடாமல் பின்தொடர்ந்தனர் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# தகுந்த பதிலடி கொடுப்போம் ட்ரம்ப் கருத்துக்கு ஈரான் பதில்



யாரேனும் தங்களை அச்சுறுத்தினால் அதற்குத் தக்க பதிலடி கொடுப்போம் என ஈரான் பாதுகாப்புப் படையின் தலைவர் ஹொசைன் சலாமி தெரிவித்துள்ளார்.

ஏமனில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கான உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்தார்.

இது குறித்து அவர் சமூக வலைத்தள பதிவு ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஈரான் பாதுகாப்புப் படையின் தலைவர் ஹொசைன் சலாமி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சி படைக்கு ஈரான் ஆதரவு தரக்கூடாது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

ஈரான் போர் தொடுக்காது எனவும் ஆனால், யாரேனும் அச்சுறுத்தினால் அதற்குத் தகுந்த பதிலடி கொடுக்கப் படும் என ஹொசைன் சலாமி தெரிவித்துள்ளார்.

# சுனிதா வில்லியம்ஸை அழைக்க சென்ற விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது

சர்வதேச விண்வெளி நிலையத்துடன் ட்ராகன் விண்கலம் இணையும் காணொளியை பிரபல கோடீஸ்வர வரத்தகர் ஈலோன் மஸ்க் தம்முடைய எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோரை சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமிக்கு அழைத்து வருவதற்காக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமும் நாசா அமைப்பும் இணைந்து விண்கலம் ஒன்றை அனுப்பியது.

நேற்று முன்தினம் இரவு 11.30 இற்கு இந்த விண்கலம் சென்றடையும் என எதிர்பார்க்கப்பட்டது.



எனினும் நேற்று காலை 9.40 இற்கு இந்த விண்கலம் சென்றடைந்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி இந்த விண்கலத்தின் ஊடாக இருவரும் பூமிக்குத் திரும்புவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 17.03.2025




இன்று மன உளைச்சலுக்கு ஆளா வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. உங்களின் சில சௌகரியங்களை நீங்கள் விட்டுக் கொடுக்க நேரும்.

பணிச்சூழல் கடினமாகக் காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. சிறப்பாக திட்டமிட்டு முன்னுரிமைப் படி பணிகளை ஆற்ற கற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் நலம்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்காகப் பணத்தைச் செலவு செய்வீர்கள். தேவையற்ற செலவுகளால் பண இழப்பு ஏற்படும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். வாழ்க்கையின் யதார்த்தத்தை புரிந்து கொள்வீர்கள். புதிய அனுபவங்கள் கிடைக்கும். மகிழ்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. நீங்கள் செய்யும் பணியில் திருப்தி காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பணத்தை முறையாக பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

அமைதியாக இருப்பதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலும்.




ஆன்மீக பயணங்களுக்கு உகந்த நாள். உங்கள் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். பொறுமையுடன் இருந்தால் நல்லதே நடக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரிடும்.

உங்களின் வருத்தமான உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இன்று சுறுசுறுப்பாக இருந்து உங்கள் துணையுடன் வசீகரிக்கும் வகையில் பழகுவது நல்லது.

நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று சிறந்த அடித்தளத்தை அமைப்பதற்கும் நல்ல தரத்தை உருவாகுவதற்கும் அதிக சிந்தனை செய்வீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடன் சிக்கல்கள் வராமல் இருக்க அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிலிருந்து விலகி இருங்கள். உங்கள் துணையுடனான அணுகுமுறையில் அமைதியும் கட்டுப்பாடும் தேவை.

அதிக வருமானம் சம்பாதிப்பது இன்று கடினமாக காணப்படும். பணப்புழக்கத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான நிலைத்தன்மை குறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டத்தை அதிகமாக நம்பாதீர்கள். கடினமாக உழைத்து பலனுக்குக் காத்திருங்கள். இசை கேட்டல் திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் மன அமைதி பெறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றப் பிரச்சினை காணப்படும். இந்தப் பிரச்சினைகளை தீர்த்து மகிழ்வுடன் வாழுங்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். உங்களிடம் இருக்கும் பணத்தை தக்க வைத்துக் கொள்வது நல்லது.

இன்று சுமாரான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உற்சாகமான நாள்.புதிய வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள். உங்கள் செயல்களை திட்டமிட்டு முறையாக செய்தால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் அடைவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்புவசப்பட்டு காணப்படுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பும் வாழ்க்கை தரமும் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீடித்த முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். உயர்ந்த நிலையில் இருப்பீர்கள்.

பணியில் அர்ப்பணிப்பு தேவை. யோசித்து வேலை செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

பண வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. வங்கியிருப்பை சிறப்பாக பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தேக ஆரோக்கியம் உறுதியாக இருப்பதை உணர்வீர்கள்.




உங்கள் உணர்சிகளை கண்காணிக்க வேண்டும். பொறுமையும் நம்பிக்கையும் தேவை. நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றியை நோக்கி பயணிக்கலாம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணியை கவனமுடன் ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். சரியான நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையாரின் கருத்துக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் அனைத்தும் சிறப்பாக நடக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவினங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையைத் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.03.2025


தனுசு

இன்று சிறிது அசௌகரியத்தை உணர்வீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

இன்று பணிச்சுமை காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செயல்படுத்துவது சிறந்தது.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை சகஜமாக வெளிப்படுத்த வேண்டியது அவசியம். உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சிறிய கடன்கள் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

ஒவ்வாமை காரணமாக இன்று சளி மற்றும் இருமலால் பாதிப்படைவீர்கள்.


கும்பம்

இன்று உங்களுக்கு சிறப்பான நாளாக அமையும். உங்களை முன்னேற்றிக் கொள்வதற்கு உகந்த மன நிலையில் காணப்படுவீர்கள். திருப்தி காணப்படும். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். பணியில் நேர்மையாக இருப்பீர்கள். சிறந்த அர்ப்பணிப்போடு பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நட்பு முறையில் பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும். அன்பு அதிகரிக்கும்.

பண வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு பணம் காணப்படும்.


மகரம்


இன்றைய நாள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். அதனால் திருப்தி உண்டாகும். உங்களை விட மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

புத்துணர்ச்சியோடு பணி புரிய வேண்டும். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.


மீனம்

இன்று உங்கள் செயல்களில் தவறுகள் நேராமல் இருக்க பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து நடைபெறும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிக்க அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நடந்தால் உறவு மலர்ந்து மணம் வீசும்.

ஆன்மீக பயணத்துக்குப் பணத்தைச் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களை பரிசோதிக்க வேண்டும்.பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# குயில்வத்தையில் பள்ளத்தில் பாய்ந்த கார்



**(மஸ்கெலியா நிருபர்)**

கண்டி – ஹட்டன் பிரதான (ஏ7) வீதியில் குயில்வத்தைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலையில் அதிகவேகமாக பயணித்த காரொன்று, வீதியை விட்டு விலகி, 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்கு உள்ளானது.

கண்டியில் இருந்து ஹட்டன் வரைக்கும் இந்த கார் பயணித்துள்ளது. ஹட்டன் குயில்வத்தை பகுதியிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தம் ஏற்பட்ட போது, காரில் சாரதி மட்டுமே இருந்துள்ளார். அவருக்கு எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லை. எனினும், கார் பலத்த சேதமடைந்துள்ளது.

திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டுள்ளமை விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.